# இயல் -2
# படைப்பாளியும் படைப்புச்சூழலும்

ஆண்டாள் பிரியதர்ஷினியின் வாழ்க்கை வரலாறும், படைப்புச்சூழலும் பற்றி ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

எண்பதுகளில் எழுத்தாளராக அறிமுகமாகிய ஆ.பி. குறுகிய காலத்தில் தமிழ்க் கவிதைகளையும், புதினங்களையும், சிறுகதைகளையும் எழுதிப் புகழ் பெற்றார். கதாபாத்திரங்களின் மனங்களைக் கூர்ந்து நோக்கும் நுட்பமான பார்வையும், அறிவின் விசாலமும் அவரைத் தமிழின் முன்னணிப் படைப்பாளர்களுள் ஒருவராக்கியது. அவரைப் பற்றியும், அவரது படைப்புகள் பற்றியும் இவ்வியல் முன்னெடுத்துச் செல்கிறது.

ஆ.பி. பிறப்பும் பெயர்ச்சிறப்பும், படிப்பும் துடிப்பும், பணி, திருமண வாழ்க்கை, படைப்புத்திறன் வளம் பெற்றவை, ஆ.பி.யும் எழுத்தும், பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் பிற படைப்பாளர்களின்கருத்துகள் படைப்புகள், பெற்ற பரிசுகள், விருதுகள், படைப்புகளை பதிவு செய்த இதழ்கள், பல நிலைகளில் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

### பிறப்பும் பெயர்ச்சிறப்பும்

வாழ்ந்து வருகிற பெண் எழுத்தாளர்களுள் குறிக்கத் தகுந்தவராக ஆ.பி. விளங்குகிறார். இவர்தம் சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் என இன்றும் வந்த வண்ணம் பல உள்ளன. தன் சொந்தப் பெயரில் தனது படைப்புகளை வெளியிட்டு,

தனக்கென ஒரு தனி இடத்தையும் பெற்றுள்ளார். எதையும் கலை நயத்தோடு காண்பதில் அதிக ஆர்வம் காட்டும் இவர் கலை வடிவில் படைப்புகளை (சான்றாக சு.பி.வீ.ப.1) எழுதுகிறார். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பாளையங்கோட்டை இவருக்குச் சொந்த ஊராகும். நெல்லை கணபதியும் சுப்புலட்சுமியும் இவருடைய பெற்றோர்களாவர்.

இவருடைய தந்தையும் சிறந்த கவிஞராவார். தாயார் சுப்புலட்சுமியும் இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றவராவார். அன்பும் அறிவும் நிறைந்த இக்குடும்பச் சூழலில் (நாள்.5.10.1966) ஆண்டாள் பிரியதர்ஷினி பிறந்தார்.

## படிப்பும் துடிப்பும்

ஆண்டாள் பிரியதர்ஷினி பிறந்தது பாளையங்கோட்டை என்றாலும், அவரது பள்ளிப்படிப்பு சென்னையில் தான் தொடங்கியது. சென்னை சாரதா வித்யாலயா உயர் நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் போதே தமிழ்மீது மிகுந்த விருப்பும், ஆர்வமும் கொண்ட இவர். பள்ளி இறுதி வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். இலக்கியத்தின் மீது கொண்ட ஆர்வ மிகுதியால் ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்து, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளம் முனைவர் (எம்..ஃ.பில்.,) பட்டம் பெற்றார். இளம் வயது முதல் இலக்கியத்தின் மீது மிகுந்த நாட்டம் உடையவராக இருந்தார். இவரது திறமை வளம் பெற அவர் பயின்ற பள்ளியும் கல்லூரியும் பெரிதும் உதவின எனலாம். பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்ற போட்டிகளில் இவர்

கலந்து கொண்டு தனது திறமையை வளர்த்துக் கொண்டார். கல்லூரிப் பருவத்திலேயே சிறுகதைகள் பல எழுதியுள்ளார்.

**பணி**

ஆ.பி. சென்னைத் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிந்து வருகிறார். பணியாற்றுவது சென்னையில் தான் என்றாலும் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டறைப்பணி, இலக்கியச் சொற்பொழிவுகள் என அலுவலக இலக்கியப் பணிகள் தொடர்பாக புனே, கோவா, பெங்களூர், புதுதில்லி, கல்கத்தா, மும்பை, முதலான வெளியூர் பயணங்களும் சென்று வருகிறார். கவியரங்கங்களில் கலந்து கொள்வதும் இவரது இலக்கியப் பணி எனலாம்.

**திருமண வாழ்க்கை**

ஆ.பி.க்கும், அவருடன் சென்னைத் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாக வேலை பார்க்கும் பால.இரமணி என்பவருக்கும் 10.02.1989ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவரது கணவரும் கவிதை எழுதுவதில் ஆர்வம் மிக்கவர். இவர்களுக்கு ஸ்ரீவிஷ்ணுவர்தன் என்ற ஆண் குழந்தையும், சக்தி அபிராமி என்ற பெண் குழந்தையும் உள்ளனர். அன்பான கணவரும், அறிவான குழந்தைகளும் இவருடைய இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

படைப்புச்சூழல் படைப்புத்திறன் வளம் பெற்றமை

இலக்கியத்தையே சுவாசமாகக் கொண்ட பெற்றோர்கள் அளித்த ஊக்கமும் இலக்கியத்தின் மேல் இவர் கொண்டுள்ள இடைவிடாத நாட்டமும் இவரது எழுத்துத்திறம் வளம் பெற்றமைக்கான சூழல் எனலாம். பள்ளி கல்லூரிகளில் பல போட்டிகளில் கலந்து கொண்டாலும், எழுத்துலகில்

இவரை அறிமுகப்படுத்தியது ‘வேர்கள் மண்ணோடுதான்’ என்ற சிறுகதையாகும். 1984இல் ‘சுமங்கலி’ பத்திரிகையில் வெளிவந்த இந்தச் சிறுகதையே இவரது முதல் சிறுகதை என்பது குறிக்கத்தக்கது. தொடர்ந்து கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம் என எழுதி வருகிறார். இவரது படைப்புகள் பலவும் பள்ளி, கல்லூரிப் பாடத் திட்டங்களுள் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன. இவரது பெரும்பாலான படைப்புகள் தரமான இதழ்களில் வெளிவந்துள்ளன.

## ஆ.பி. படைப்புகள்

ஆ.பி. படைப்புகள் கீழ்க்காணுமாறு அமைகின்றன.

கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம் என இவரது படைப்புகள் விரிந்து கொண்டே சென்றாலும் நாடகத்துறையில் இவரது பங்கு இடம் பெறவில்லை.

## கட்டுரைகள்

1. விடிவைத் தேடி
2. பெண் எழுத்து
3. தேசம் மிச்ச மிருக்கட்டும்
4. சாண அடுப்பும் சூரிய அடுப்பும்
5. ரேடியோவின் கதை
6. டெலிவிஷனின் கதை.

## கவிதைத் தொகுப்புகள்

1. தோகையெல்லாம் துப்பாக்கிகள் - மரபுக்கவிதைகள் தொகுப்புகள்
2. முத்தங்கள் தீர்ந்து விட்டன (டிசம்பர் 2004)
3. மன்மத எந்திரம் (மார்ச் 2006)

4. காதல் நாற்பது (மார்ச் 2006)
5. பெண்வாசனை (நவம்பர் 2007)
6. புதிய திருப்பாவை
7. சுயம் பேசும்கிளி

## சிறுகதைகள்

1. வானவில் வாழ்க்கை (டிசம்பர் 1999)
2. தோஷம் (2000)
3. தலைமுறைதாகம் (நவம்பர் 2004)
4. பெருமூச்சின் நீளம் (டிசம்பர்.2004)
5. ரிஷியும் மனுஷியும்

## புதினங்கள்

1. சுருதி பிசகாத வீணை (நாவல் + சிறுகதை) (ஏப்ரல், 1987)
2. தாளம் தப்பிய தாலாட்டு (மே, 1994)
3. கதாநாயகி, செலுலாய்டு அபாயம். (ஜூன், 1998),
4. சாருலதா சின்னவள், கானல் சொர்க்கம். (மார்ச்.8, 1999),
5. கனவுகள் கைப்பிடிக்குள், விலை. (நவம்பர்.2000),
6. சிகரம் சிலந்திக்கும் எட்டும் விடியும் நேரம், சூரசம்ஹாரம். (டிசம்பர்.2000),
7. வேடிக்கை மனிதர்கள் உயிரெழுத்து, ஆயுத எழுத்து, கட்டில் மனசு. (நவம்பர்.2001),
8. தகனம், (டிசம்பர்.2001)
9. சூரியனை விடிய வைப்போம் (புதுக்கவிதைப் புதினம், 2004)
10. முதல் ஒளிபரப்பு ஆரம்பம்
11. நூலிழை பந்தங்கள்.

## ஆ.பி. படைப்புகள் பெற்ற விருதுகள்

'தோஷம்' சிறுகதைத் தொகுப்பு - 'லில்லி தேவசிகாமணி விருது' 2001.

'சுயம் பேசும் கிளி' கவிதைத் தொகுப்பு – KRG நாகப்பன் ராஜம்மாள் விருது.

'தகனம்' புதினம் - காசியூர் ரங்கம்மாள் விருது.

'உண்டியல்' கவிதை – பாவலர் முத்துச்சாமி விருது, 2003.

டிசம்பர், 1992 – (நெல்லை இலக்கிய வட்டம்) "எழுத்துலகச் சிற்பி" விருது

சென்னை – தேனீ இலக்கியக் கழகம், "கவிச் செம்மல்" விருது.

2010-இல் தமிழக அரசின் 'கலைமாமணி' விருது.

## ஆ.பி. படைப்புகள் பெற்ற பரிசுகள்

1. தோஷம்
2. அவனின் திருமதி
3. தீ
4. பூஜை

} ஆனந்த விகடன் வைர விழாப் போட்டியில் ரூ.500 பரிசு பெற்று வெளி வந்த சிறுகதைகள்.

'கழிவு' சிறுகதை - இலக்கியச் சிந்தனை அமைப்பால் சிறந்த மாதச் சிறுகதையாகத் தேர்வானது.

'கற்பெனப்படுவது' சிறுகதை – தினகரன் ஜூலை, 2000, ரூ.500 பரிசு பெற்ற சிறப்புச் சிறுகதை.

'சரஸ்வதியைக் கரைத்த பனிக்கட்டி' - தினமணி கதிர், ஆகஸ்ட் 2001, தினமணி, நெய்வேலி புத்தகக் கண்காட்சி சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு ரூ.3,000/- பெற்றது.

கரீஷ்மா சிறுகதை – ஆனந்தவிகடன் (ஜுன். 2001) பவளவிழா ரூ.5000 பரிசு பெற்ற முத்திரைச் சிறுகதை.

'தோஷம்' சிறுகதை – ஆனந்தவிகடன் (நவம்பர்.2001) பவளவிழா ரூ.5000 பரிசு பெற்ற முத்திரைச் சிறுகதை.

1978- வள்ளலார் விழாவில் வள்ளலாரின் திருஅருட்பா பற்றிய பேச்சு போட்டியில் முதல் பரிசு.

மனித வள மேம்பாட்டு நிறுவனம் நடத்திய எரிசக்தி வளர்ச்சிக்காக "சூரிய அடுப்பும் சாண எரிவாயும்" என்ற நூலுக்கு அகில இந்திய அளவில் தமிழ் நூலுக்கான முதற்பரிசு.

1979- அறிஞர் அண்ணாவைப் பற்றிய மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு. வழங்கியவர். முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

1979- குழந்தைகள் தின விழாவையொட்டி கட்டுரைப் போட்டியில் மாநில அளவில் முதற்பரிசு செ. அரங்க நாயகத்திடம் இருந்து பெற்றார்.

1982 – குரோம்பேட்டையில் வைஷ்ணவ மகளிர் கல்லூரியில் நடந்த அனைத்து கல்லூரி கவிதைப் போட்டியில் முதற்பரிசு எத்திராஜ் கல்லூரி மாணவியாய் கலந்து கொண்டு இலலிதா காமேஸ்வரனிடமிருந்து பெற்றார்.

1984 – கல்லூரி நாள் விழாவையொட்டி அனைத்து கல்லூரி மாணவிகளுக்கு நடிப்புப் போட்டியில் சிறந்த நடிகைக்கான முதற்பரிசு.

1986 – சுபமங்கலா பத்திரிகை சார்பாக மண்ணோடு தான் சிறுகதைக்கு பட்டுப்புடவையுடன் முதற்பரிசு.

1986 – அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் பிரிவில் ஆங்கில இலக்கியத்தில் எம்.ஃ.பில் பட்ட ஆய்விற்காக தங்க பதக்கம்.

## ஆ.பி., படைப்புகளை அச்சிட்ட பத்திரிகைகள் / இதழ்கள்

- சரஸ்வதியின் ஏடு தொலைந்து போனது – தினமணிகதிர், நவம்பர், 2000.
- கற்பெனப்படுவது – தினகரன், ஜூலை, 2000.
- கவிதையைத் தின்று பசியாறி - தினமணிகதிர், பிப்ரவரி, 2001.
- சரஸ்வதியைக் கரைத்த பனிக்கட்டி - தினமணிகதிர், ஆகஸ்ட், 2001.
- சந்தோஷம் விற்பவன் - இதயம் பெண்மலர், நவம்பர், 2001, தீபாவளி சிறப்பிதழ்.
- இரவல் முகமும் கடன்வாங்கிச் சுவாசமும் - அம்பலம் மின்னிதழ், மே, 2000.
- கோரைப் புற்களின் கோரைப் பற்கள் - ஸிஃபி டாட்காம், மின்னிதழ், ஆகஸ்ட், 2000.
- சரஸ்வதி தாரை வார்த்த 33 வருஷங்கள் - தினமணி கதிர், மே, 2001.
- அப்பா வாசனை – அம்பலம் மின்னிதழ், செப்டம்பர், 2001.
- தீ நாக்குகள் சரசுவைத் தின்றபோது – தினமணிகதிர், ஆகஸ்ட், 2000.

- அக்டோபர் 2 – விஜயபாரதம், நவம்பர், 2001, தீபாவளி சிறப்பிதழ்.
- மரத்தைக் கர்ப்பம் சுமந்தவள் - கலைமகள், நவம்பர், 2001, தீபாவளி சிறப்பிதழ்.
- கரீஷ்மா – ஆனந்தவிகடன், முத்திரைச் சிறுகதை, ஜுன், 2001.
- தோஷம் - ஆனந்தவிகடன், முத்திரைச் சிறுகதை, நவம்பர், 2001.
- 'விலை' புதினம் - குங்குமச் சிமிழ்.
- 'கனவுகள் கைப்பிடிக்குள்' - மங்கையர் இதழ்.
- 'சாருலதா' - குமுதம் இதழ் - மாலைமதி.
- 'சின்னவள்' - நக்கீரன் - இனிய உதயம்
- 'கானல் சொர்க்கம்' - மாலைமுரசின் கதைமலர்.
- 'விடிவைத் தேடி' - தினமணி.
- 'வேர்கள் மண்ணோடுதான்' சிறுகதை – 1984 சுமங்கலி பத்திரிகை.
- 'துரோணர்கள் துரோகிகள் இல்லை' - செப்டம்பர், 1999, தாமரைச் சிறுகதைகள்.
- 'வலைப்பின்னல் என்ற சிகரம் சிலந்திக்கும் எட்டும் - தேவியின் கண்மணி, குங்குமச்சிமிழ், இனிய உதயம்.
- 'வேடிக்கை மனிதர்கள்' - தேவியின் கண்மணி, குமுதம், மாலைமதி, இதயம் பேசுகிறது, சரவணா ஸ்டோர்ஸ் கதைமலர்.

## ஆ.பி., படைப்புகளை வெளியிட்ட பதிப்பகங்கள்

கனவுகள் கைப்பிடிக்குள் விலை – வானதி, கங்கை பதிப்பகம்.

சாருலதா – கங்கை பதிப்பகம்

முத்தங்கள் தீர்ந்துவிட்டன – குமரன் பதிப்பகம்.

தாளம் தப்பிய தாலாட்டு – என்.சி.பி.ஹெச். (பி) லிட்

தகனம் - என்.சி.பி.ஹெச். (பி) லிட்.

சூரியனை விடிய வைப்போம் - மதிநிலையம்.

மன்மத எந்திரம் - குமரன் பதிப்பகம்.

காதல் நாற்பது – குமரன் பதிப்பகம்.

சுருதி பிசகாத வீணை – ஆண்டாள் பதிப்பகம்.

சிகரம் சிலந்திக்கும் எட்டும் - வானதி, திருவரசு பதிப்பகம்.

வேடிக்கை மனிதர்கள் - திருவரசு பதிப்பகம்.

## ஆ.பி., யின் படைப்புகள் குறித்த அறிஞர்களின் கருத்துகள் பின்னிணைப்பில் * இணைக்கப்பெற்றுள்ளன.

சுருதிபிசகாத வீணை – கோ. வசந்திதேவி

கதாநாயகி – அனுராதா ரமணன்

தகனம் - கி.ரா.,

சூரியனை விடிய வைப்போம் - வைகைச் செல்வி

**பள்ளி, கல்லூரிகளில் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற ஆ.பி., புதினங்கள்**

| | |
|---|---|
| ‘தகனம்’ புதினம் | - ஸெயிண்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி. |
| | - அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி. |
| | - பிஷப் அப்பாசாமி கல்லூரி, கோவை. |
| | - கிருஷ்ணா கலைக்கல்லூரி, கோவை. |
| ‘வானவில் வாழ்க்கை’ சிறுகதைத் தொகுப்பு | - ஸ்டெல்லா மேரி கல்லூரி, சென்னை. |
| ‘கதாநாயகி’ புதினம் | - கேரளா பள்ளி இறுதிப் பாடத்திட்டத்தில் இணைப்பு |
| ‘கணிப்பொறி’ கட்டுரை | - தமிழ்நாடு அரசு பாடத்திட்டத்தில் இணைப்பு. |

**படைப்புச்சூழல்**

பெண்களின் உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் ஆ.பி., தன் படைப்புகள் மூலம் போராடி வருகிறார். இருபத்தோராம் நூற்றாண்டில் பெண், தான் அடைய வேண்டிய எல்லா உரிமைகளையும் அடைந்துவிட்டதாகக் கூறமுடிவதில்லை. சமூகரீதியாகவும், கருத்து ரீதியாகவும், சடங்கு ரீதியாகவும், அவளுக்கான அடிமைத்தளைகள் இருக்கத்தான் செய்கின்றன. பெண்கள் சுயமாகச் சிந்திப்பதையும், செயல்படுவதையும் அனுமதிக்காத தந்தை வழிச் சமூகம், இன்று கல்வி, சுயமாகச் சம்பாதித்தல் போன்ற ஒரு சில உரிமைகளைக் கொடுத்துள்ளனர். எனினும், சமுதாயத்திலும், வீட்டிலும் அவளுக்கான தனி இடம் முழுமையாகத் தரப்படவில்லை. சமுதாயத்தில் இத்தகைய பெண்களின் வலிகளையும், வேதனைகளையும், அவர்கள் அடிமையாக வைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளையும் கண்டு பாதிப்புக்கு உள்ளான

ஆசிரியர் இந்த நிகழ்வுகளை புதினமாக்க வேண்டும் என்று எண்ணிய சூழ்நிலையில் ஆ.பி., 'புதினங்கள்' எழுந்துள்ளன.

## படைப்பின் நோக்கம்

எந்தவொரு படைப்புமே ஏதாவது ஓர் செய்தியை மையமாகக் கொண்டு அமையும். அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் ஒவ்வொரு படைப்பும் இன்றைய சமூக அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள ஆதிக்க உறவுகளை உடைப்பதே நோக்கமாகும்.

எல்லோர்க்கும் வாழ்க்கையில் விடிவு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் முகமாக "விடிந்துவிட்டது. எல்லோர்க்கும் - என்றைக்குமே விடியல் நலமாகட்டும். பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால். . ."[1] என்ற உடன்பாட்டு சிந்தனையின் வழித் தன்னுடைய கருத்தினை ஆ.பி முன் வைக்கிறார்.

"வாழ்க்கையின் சறுக்கல்தான் போதிமரம். விழுவதும் எழுவதுமான விழுப்புண்ணே – நாளைய பயணத்தின் வழிகாட்டி"[2] என்று வெற்றி தோல்வியின் நிலையை எடுத்துக்காட்டி அதற்கான 'விடியும் நேரம். . .' விரைவில் வரும் என்று கூறுகிறார். இவருடைய படைப்புகளில் பெண்கள், "சிகரங்கள் - உயரங்கள் இல்லை. முனைப்பு இருந்தால் - சிலந்திக்கும் எட்டும் என முரசு கொட்டுகிறார்கள்"[3] என்று பெண்களின் விழிப்புணர்வுச் சிந்தனையை தன்னுடைய உடன்பாட்டுச் சிந்தனையாக 'பெண்விடுதலை'-யை தெளிவுபடுத்துகிறார்.

## படைப்பிலக்கியமும் படைப்பிலக்கியச் சூழலும்

காலந்தோறும் மனித சமுதாயத்தின் முழுப்பரிமாணத்தைப் படைப்பிலக்கியங்கள் காட்டி வருகின்றன.

“தனிப்பட்ட மனிதர்கள், குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் எனச் சித்திரிக்காமல் அனைவரையும் ஒரு வரலாற்றின் வகை மாதிரிகளாக, ஒரு காலகட்டத்தின் விளைவுகளாக, வாழ்வியற் சிக்கல்களை நுட்பமாகவும் நுணுக்கமாகவும் காட்டிடும் இலக்கியமே படைப்பிலக்கியமாகும்”[4] என்று மு. மீனாட்சி குறிப்பிடுகிறார்.

படைப்பாளர் சமூக நிகழ்வுகளை எந்தளவிற்குப் பதிவாக்கியுள்ளார் என்பதைக் காண்பதோடு, சமூகச் சிக்கலுக்குத் தீர்வு காணும் நோக்கில் தன் படைப்பினை எவ்வாறு நகர்த்தியிருக்கிறார் என்ற முடிவுக்கு வர இயலும், இவ்வடிப்படையில் படைப்பாளன் பற்றிய ஆய்வு தேவைப்படுகிறது.

படைப்பாக்கத்திற்குச் சமூகத்தின் தாக்குதல் மட்டுமல்லாது படைப்பாளனின் பிறப்பு, குடும்ப வாழ்க்கை போன்ற அனைத்துத் தாக்குதல்களும் ஒரு உந்துதல்களாக அமைகின்றன.

ஒரு படைப்பாளனின் படைப்பு இயல்பாக, இதயத்தைத் தொடுவதாக அமைய வேண்டுமெனில் அவருக்கு படைப்புச் சுதந்திரம் ஓரளவிற்காவது இருக்க வேண்டும். அவனது குடும்பச் சூழல், உறவுகள் போன்றவை அவனுக்கு ஊக்குவிப்பானாக அமைய வேண்டும். அவ்வாறு அமையுமிடத்து அவனால் எதனைப் பற்றியும் தரவுகளுடன் தரமான ஒரு படைப்பை நிச்சயமாக உருவாக்க இயலும். அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் குடும்பம் அவருக்கு உறுதுணையாக உள்ளதை அவரது ‘வேடிக்கை மனிதர்கள்’ புதினம் ‘என்னுரை’-யில் அவர் குறிப்பிட்டிருப்பதன் வழி அறிய முடிகிறது.

பொதுவாக, தன் வாழ்வில் உண்டான நிகழ்வுகள், தான் பெற்ற அனுபவங்கள் போன்றவை ஒரு மனிதனை இலக்கியங்கள் படைக்கத் தூண்டுகின்றன. இவையன்றி தன் சமகால வாழ்வில் தன்னைச் சுற்றியுள்ள மனிதர்கள், அவர்களுக்கு ஏற்படும் நிகழ்வுகளின் வழி உண்டாகும் அனுபவங்கள், சமுதாய நிகழ்வுகள், சிக்கல்கள் போன்றவைகளும் படைப்புகளாக மலர்கின்றன.

ஆண்டாள் பிரியதர்ஷினி தன் வாழ்வில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விட தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களைக் கூர்ந்து கவனித்து, அவர்களையே தன் படைப்புகளின் கருவாகவும் அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளையே படைப்புச் சூழல்களாகவும் கொண்டு எழுதுகிறார் எனலாம். தன்னுரையில் அவர் கூறியிருக்கும் கருத்துக்கள் அவரைச் சுற்றி வாழும் மனிதர்களை மையமாக வைத்தே நூல்கள் எழுதுவதை உறுதி செய்கின்றன. சான்றாக,

### வேடிக்கை மனிதர்கள்

2001ல் வெளிவந்த ஆசிரியரின் 'வேடிக்கை மனிதர்கள்' படைப்பு அவருக்கு அருகில் வாழ்ந்த மனிதர்களுக்கு நேர்ந்ததின் விளைவால் உருவானதாகும்.

"வேடிக்கை மனிதர்கள் காட்டும் பெண்ணும் ஆணும் அப்படியானவர்கள் தான். எனக்குச் சமீபமானவர்கள், அவர்களுக்கு நேர்ந்தது. அவர்களுக்கு நேர்ந்ததை நான் அருகிருந்து உணர்ந்தது இப்படியானது இந்தத் தொகுப்பு"[5] என்று தனது படைப்பு உருவானதின் சூழலை ஆசிரியரே தன் நூலின் முன்னுரையில் கூறியுள்ளார்.

நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வில், ஒரு மனிதனுக்கு அவனது இறுதிநாள் வரை ஏதேனும் ஒரு வகையில் சிக்கல்கள் தொடர்கின்றன. முடிவில்லாத அத்தகைய சிக்கல்களுக்கும் ஏதேனும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தே இலக்கியங்கள் எல்லாம் தன்னை முடித்துக் கொள்கின்றன. தன் படைப்பின் ஆதாரங்களாக விளங்கும் அம்மனிதர்களையும் அவர்களின் சூழல்களையும் பற்றிக் குறிப்பிடுகையில்,

"எழுத்தில் இனம் சொன்னதைவிடவும் - அவர்களின் நிஜவாழ்க்கைச் சிராய்ப்பும் வலியும் கண்ணீரும் குருதியும் வெடிப்பும் வேதனையும் ஜாஸ்தியானது. அத்தனையும் ஜீரணித்து, எதிர்நீச்சலிட்டு, இன்னமும் உயிர்ப்பும் துடிப்புமாகத் தொடர்ந்து ஜீவிக்கிறார்கள்"[6] என்கிறார்.

ஒரு படைப்பு உருவாகுவதற்கு இவை சூழல்களாக அமைகின்றனவேயன்றி ஒரு முடிவினைத் தருவன அல்ல. சூழல்களைக் கொண்டு எழுத்தாளன் தன் போக்கில் அப்படைப்பினை முடிக்கிறான் எனலாம்.

இவ்வுலகில் வாழும் மனிதர்களுக்குப் பொதுவான நிலையில் சிக்கல்கள் சில இருந்தாலும் ஒவ்வொருவரின் வாழ்வும் தனிப்பட்டது. ஆண்கள் என்பதால் அவர்களுக்கெல்லாம் ஒரே மாதிரியான சிக்கல்களோ, பெண்கள் என்பதால் அவர்களுக்கெல்லாம் ஒரே மாதிரியான சிக்கல்களோ இருப்பதில்லை. அதனால் தான் அன்றிலிருந்து இன்றுவரை எத்துணை இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் ஒவ்வொன்றும் தனிப்பட்டே காணப்படுகின்றன. ஒரே வகையான சிக்கல் பற்றி சில படைப்புகள் எழுந்தாலும் நிகழ்வுகள், உணர்வுகள், எண்ணங்கள் நிச்சயம் வேறுபடுகின்றன. ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'வேடிக்கை மனிதர்கள்'

தொகுப்பில் வரும் மூன்று பெண்களுமே ஆசிரியர் தொழிலில் இருந்தாலும் மூவருக்கும் உண்டாகும் சிக்கல் வெவ்வேறாக அமைவதைக் காணமுடிகிறது.

"குட்டக்குட்டக் குனிய வேண்டுமா? என்று சரசுவதி, காவேரியை அதிகமாகவும் பூரணியை ஓரளவுக்கும் கேட்டவர்கள் உண்டு. பீறிட்டு வெடித்துக் கிளம்பத் தேவையான அழுத்தத்தை அந்தக் குனிதல் தான் தருகிறது. எடுத்த எடுப்பிலேயே வெட்டி விலகவும் உதறிப் போடவும் விடாமாதிரியான சமூகம் நமது"[7] என்று ஆசிரியர் தனது படைப்புச் சூழல் உருவாகக் காரணமானவர்களைப் பற்றியும் அவர்களின் குடும்ப, சமுதாயச் சூழல் பற்றியும் விமர்ச்சிக்கிறார்.

## கனவுகள் கைப்பிடிக்குள்

2002-இல் வெளிவந்த ஆசிரியரின் 'கனவுகள் கைப்பிடிக்குள்' படைப்பு தான் வாழும் சமுதாயத்தில் காணும் இளைஞர்களை முன்மாதிரியாக வைத்தே படைத்துள்ளார். இளைஞர்கள் வாழும் இடத்திற்கு ஏற்ப சூழல் மாறும் நிலையை ஆ.பி. எடுத்துக்காட்டியுள்ளார்.

"ஒற்றை ரூபாய் கூடச் சுயமாய்ச் சம்பாதிக்கக் கற்றுத் தராத கல்வி, வாழ்வைத் தோளில் சுமக்கும் தைரியம் தராத கல்வி, ஞானத்தை விருத்தி செய்யாமல், பக்கங்களை மனப்பாடம் செய்ய வைக்கும் கல்வியின் கைதிகள் இவர்கள்"[8] என இளைஞர்களுக்கு குடும்பச் சூழலை எடுத்துக்கூறி, அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தும் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாது 'வாசிப்பு' மட்டுமே கல்வி என்று இருப்பவர்களுக்கு, தன்னுடைய படைப்பை வாசிப்பதன் மூலம், கனவு

வாழ்விலிருந்து மீண்டு நடைமுறை வாழ்வில் எதார்த்தமாக வாழ வழிகாட்டியுள்ளார்.

நடைமுறை வாழ்வில் குடும்பம் என்ற சூழலை தன்னால் ஏற்படுத்திக் கொள்ள முடியாத, எதிரெதிர் துருவங்களைத் தனக்குள் உணர்ந்த பெண்ணின் கதையை, இடத்திற்கு ஏற்ப படைப்புச் சூழல் மாறும் நிலையை 'கனவுகள் கைப்பிடிக்குள்' என்ற படைப்பு அறிவுறுத்துகிறது. இளைஞர் சமுதாயத்திற்கு ஏற்ப ஆசிரியர் படைப்புச் சூழலினை அமைத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

## தாளம் தப்பிய தாலாட்டு

ஒரு படைப்பாளி எந்த வயதிலும் எத்துணை வயது உணர்வுகளையும் அடைந்து பாத்திரங்களைப் படைக்க முடியும் என்பதற்கு, 1994-இல் வெளிவந்த ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'தாளம் தப்பிய தாலாட்டு' புதினம் சான்றாக அமைந்துள்ளது.

ஆசிரியர் கல்லூரி மாணவியாக இருந்த பருவச் சூழலில் எழுதிய இக்கதை, "திட்டமிட்ட சிந்தனை எதுவும் இன்றியும் அனுபவம் சிறிதும் இன்றியும் இளம்பருவத்தில் மனசுக்குள் பொங்கிய உணர்வுகளை எழுத்தாக்க வடித்ததில் 'தாளம் தப்பிய தாலாட்டு உருவானது"[9] என்று 'என்னுரை' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

"காலங்கள் மாறலாம்
யுகங்கள் கரையலாம்
மனிதன் கூட மாறலாம்
மனித உணர்ச்சிகள் மாறுவதில்லை
உணர்வுப் பிரவாகங்கள் மாறுவதில்லை"[10]

என்று மனித உணர்வுகளும், உணர்ச்சிகளும் என்றும் மாறாத ஒன்று என்பதை ஆசிரியர் கதையின் வழி எடுத்துக் காட்டியுள்ளார்.

## சிகரம் சிலந்திக்கும் எட்டும்

2000-இல் வெளிவந்த ஆசிரியரின் ‘சிகரம் சிலந்திக்கும் எட்டும்’ படைப்பில் பெண்களின் வாழ்க்கைச் சூழலைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார். பெண்களின் வாழ்க்கை எல்லாமே சூழலைப் பொறுத்துதான் அமைகிறது என்பதனைக் கூறும் போது; “வாழ்க்கை இரண்டு வகை, ஆண் வாழ்க்கை, பெண் வாழ்க்கை. பெண் வாழ்க்கையினுள் ஆண் வாழ்க்கையும் அடங்கும். பெண் வாழ்க்கை அப்படியல்ல. தனித்தன்மை உண்டு. தனித்த அடையாளம் உண்டு. தனித்த முகக்கூறு உண்டு. தனித்த அகக்கூறும் உண்டு. இந்தப் பெண்ணுக்குள் ஆணின் வாழ்க்கை கரைகிறது. முகமிழக்கிறது. ஆனால் கரைந்து போகும் ஆனால் ஆட்டிப் படைக்கப்படுகிறாள் பெண் என்பது தான் விசித்திரம். இந்த முரண்பாடு ஏன்? யோசித்தால் புரியும். நல்ல ஆணின் பெருந்தன்மைக்குத் தன்னை அடிமையாக்கத் துடிக்கிறாள். மோசமான ஆணுக்கு எஜமானியாகி வெடிக்கிறாள். ஆணின் அழுக்கு முகம் வெளிப்படுகையில் அவனிடமிருந்து விலகுகிறாள், அவனை விலக்குகிறாள். அவனிடமிருந்து பிரிகிறாள் அவனைப் பிரிக்கிறாள். அவன் தங்கம் மடம் ஆகிறாள். எல்லாமே சூழலைப் பொறுத்துத்தான்.”[11]

இவருடைய படைப்புகளில் வரும் பெண்கள் நொறுங்கி விடாத சூறாவளிகளாகவே காணப்படுகிறார்கள். பெண்களின் வாழ்க்கைச் சூழல், அவள் சார்ந்திருக்கும் வாழ்க்கை, அவளைச் சார்ந்திருக்கும் வாழ்க்கை என்ற

இரு நிலைகளில் அமைந்து காணப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

## படைப்பாளியின் மனம்

படைப்பாளிகள் தங்களுக்குள் ஒரு குறுகிய வட்டத்தை உருவாக்கிக் கொண்டு எழுதுவது இலக்கியத்திற்குப் பொருத்தமாக இருக்காது. அவர்களுக்குப் பரந்துபட்ட மனப்பான்மை வேண்டும். எதையும் எழுதிப் பார்க்க வேண்டும் என்ற துணிச்சலும் இருக்க வேண்டும். இத்தகைய சூழலில் இன்றைய எழுத்தாளர்கள் இயங்குவது சிறந்ததாகும் என்ற மன வெளிப்பாட்டை ஆ.பி.,யிடம் காணமுடிகிறது,

## எதிர்காலக் குறிக்கோள்

'தகனம்', 'தாளம் தப்பிய தாலாட்டு', 'சுருதி பிசகாத வீணை', 'சூரியனை விடிய வைப்போம்', 'சிகரம் சிலந்திக்கும் எட்டும்', 'கனவுகள் கைப்பிடிக்குள்', 'சாருலதா', 'கதாநாயகி', 'வேடிக்கை மனிதர்கள்' போன்ற சிறந்த புதினங்களோடு 'தோஷம்', 'பெருமூச்சின் நீளம்', 'வானவில் வாழ்க்கை', 'தலைமுறை தாகம்' போன்ற சிறுகதைத் தொகுப்புகளோடு, 'முத்தங்கள் தீர்ந்துவிட்டன', 'மன்மத எந்திரம்', 'காதல் நாற்பது', 'சுயம்பேசும் கிளி', 'புதிய திருப்பாவை' போன்ற கவிதைத் தொகுப்புகளையும் 'பெண்எழுத்து', 'விடிவைத் தேடி' போன்ற கட்டுரைத் தொகுப்பு எனப் பல வகைமையில் அமைத்தாலும் இவற்றை அடுத்து வெல்லும் வகையான படைப்புகளைச் செய்து இலக்கிய உலகில் தடம்பதித்து தனக்கென ஓர் இடத்தைப் பெறுவது இவரது குறிக்கோளாக உள்ளது.

## தொகுப்புரை

தாமிரபரணித் தண்ணீரும், நெல்லை மண்ணும், பொதிகைத் தென்றலும், குடும்பச் சூழலும், குழந்தைச் செல்வங்களும், பணியிடச் சூழலும் ஆ.பி., படைப்புகள் சிறக்க வழிவகுத்துள்ளன. ஆ.பி., புதினங்கள் பல பள்ளி மற்றும் கல்லூரிப் பாடத்திட்டங்களில் இடம்பெறும் அளவில் இலக்கியத் தரம் வாய்ந்தன.

படைப்பாளி தன் படைப்பின் பாடுபொருளுக்கும் காலச் சூழலுக்கும் ஏற்றதான படைப்பாக்க நெறியைத் தேர்ந்து, தன்னூலைப் படைக்கவில்லை எனில் ஆ.பி. படைப்பு வெற்றி பெற்றிராது. இலச்சியப் போக்குடன் நடப்பியல் தன்மை கொண்ட படைப்புகளே படைப்பிலக்கியமாகின்றன. பெண்களின் அகப்புறச் சூழல்கள் பெண்படைப்பாளிகள் படைப்பாகும் பொழுது அவர்களின் சொந்த அனுபவங்கள், வாழ்க்கையில் பெற்ற பாடங்கள், கருத்துச் சார்புகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றை இணைத்தே தருகின்றனர். ஆ.பியின் ஒவ்வொரு படைப்பும் சமுதாயத்தின் பல நிலைகளிலும் பெண் விடுதலையை மையமாகக் கொண்டு அமைந்து இருக்கிறது. மேலும், கிராமிய, நகரச் சூழலைப் பின்புலமாகக் கொண்டு பெண்களின் வாழ்க்கை நிலையை புதினத்தில் பதிவாக்கியுள்ளார் எனலாம்.

# அடிக்குறிப்புகள்

1. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள், என்னுரை, ப.iV.
2. ஆண்டாள் பிரியதர்ஷினி, சிகரம் சிலந்திக்கும் எட்டும், யோசிக்கும் வேளையிலே. . .பக்.iii- iv.
3. மேலது, ப.iv.
4. மு. மீனாட்சி, தமிழில் இலக்கியமும் படைப்பிலக்கியமும், ஆய்வுக் கோவை, 1998. ப.1341.
5. ஆண்டாள் பிரியதர்ஷினி, வேடிக்கை மனிதர்கள், ப.3.
6. மேலது. ப.3.
7. மேலது. ப.4.
8. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள், என்னுரை, ப.iv.
9. ஆண்டாள் பிரியதர்ஷினி, தாளம் தப்பிய தாலாட்டு, என்னுரை, ப.3.
10. மேலது, ப.4.
11. ஆண்டாள் பிரியதர்ஷினி, சிகரம் சிலந்திக்கும் எட்டும், யோசிக்கும் வேளையிலே. . .,ப.iii.